உ

சிவமயம்



யாழ்ப்பாணம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை

வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி.அருணாசலம் மகேஸ்வரி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# 31ம் நாள் நினைவுமலர்

## 05.05.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்....



குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
பொறுமையின் திருவுருவாய் திகழ்ந்து
பக்குவமாய் எமை வளர்த்து
பரிவுடனே அறிவூட்டி
நெறிப்படுத்தி வாழ்வளித்த
எமதருமைத் தெய்வத்தின்
பாதகமலங்களிற்கு இம்மலரினைக்
கண்ணீர்ப் பூக்களுடன் கலந்து
காணிக்கை ஆக்குகிறோம்

-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணுலகில்
10.08.1921

விண்ணுலகில்
03.04.2005

அமரர்

# திருமதி.அருணாசலம் மகேஸ்வரி

அவர்களின்

## திதி வெண்பா.

ஆண்டு தாரணியே அண்டிய பங்குனியில்
பூண்ட இருபத்தொன் றினிலே - மாண்புடைய
மங்கை மகேஸ்வரியாள் தசமித் திதிதானே
பொங்கு சோதியுட்சேர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## பிள்ளையார் துதி

ஆனைமுன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுருவாணி பதம் நாடு.

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே



## தேவாரம்

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பா நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சௌகரிய சூழலாய் என் நெஞ்சம் தன்னை
நிற்பதத்து நிலாவுலா நெஞ்சம் தன்னுள்
நிலாவுலாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே நானுண்ணை விடுவேனல்லேன்
கனகமா மணி நிறத்தென் கடவுளானே

## திருவாசகம்

கடையவனே உனைக் கருணையினாற்
கலந்து ஆண்டு கொண்ட
விடையவனே விட்டுடுதிகண்டாய்
விறல்வேங்கை யென்தோள்
உடையவனே மண்ணும் உத்தர கோச
மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தே எனும் பிரான்
வந்தென்னைத் தாங்கிக் கொள்ளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா



நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியமெ் மீசனேயுன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



## பெரியபுராணம்

தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு தரியாது
மன்னவர் கண்மழை பொழிந்தார் வானவர்பூமழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழ நின்றார் வீதி விடங்கப் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி அருணாசலம் மகேஸ்வரி அவர்களின் வாழ்க்கை வரலாறு

எண்சீர் விருத்தம்

இந்துசமுத் திரத்தின்நல் முத்து என்று
இமயவர்கள் போற்றுகின்ற ஈழ நாடு
கந்தமணம் கமழுகின்ற எங்கள் நாட்டில்
கவினுறுநல் வளங்கள்தான் கொண்ட யாழில்
முந்தையோர் பரம்பரையாய் வாழ்ந்த பூமி
மூதறிஞர் வாழ்கின்ற சங்கா னையே
சந்தமும் மக்கள்தான் சூழ்ந்து வாழும்
சால்புடைய பதியென்றே சொல்வர் ஆன்றோர்.

கார்காத்த உயர்சைவ வேளாண் மரபில்
கற்றவர்கள் போற்றிடவே வாழ்ந்த நல்லோன்
பார்போற்றும் ஒவசீயர் சிங்கப் பூரில்
பண்புடனே நெடுஞ்சாலைப் பணியில் நின்ற
சீர்செம்பொற் சோதிக்கும் மங்கை நல்லாள்
சிறப்புடைய மழவராயர் முதலி மரபில்
பேர்பெறவே வாழ்ந்திட்ட இராச லட்சுமி
பொற்புடைய நங்கைக்கும் வந்த முத்து.

பண்புடைய மகேஸ்வரியாம் மங்கை நல்லாள்
பாசமுள்ள புத்திரியாய் வந்து தோன்ற
மண்ணிலேதம் செல்வமெல்லாம் இவளே என்று
மகிழ்வுடனே பெற்றவர்கள் ஏந்தி நல்ல
கண்ணினது மணிபோலவே அன்பு பொங்க
கருத்துடனே வளர்த்திட்டார் தரணி போற்ற
நண்ணியபல் கலையெல்லாம் நன்கு கற்று
நல்லவர்கள் போற்றிடவே நன்று வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புள்ள பொதுவேலைப் பணியில் நின்று
பொருந்தியநல் தொழினுட்ப பதவி மேவி
வெறுப்பின்றிப் பணிசெய் ஓய்வு பெற்ற
வித்தகராம் குமாரகுல சிங்கம் அமரர்
உறுபயனாய் நீர்ப்பாசனப் பணியே செய்த
உரியநல்ல தொழினுட்ப பதவி தன்னில்
மறுப்பின்றிக் கனடாவில் நன்றே வாழும்
மதிப்புடைய தனபால சிங்கம் தம்பி.

நெடுஞ்சாலை மேற்பார்வைப் பணியில் நின்ற
நேசமுள்ள குலேந்திரசிங் கம்நல் அமரர்
எடுப்பான தம்பியுடன் லண்டன் வாழும்
ஏந்திழையாள் பூமாதேவி என்னும் தங்கை
நடுநின்று தபாலதிபர் பணியே செய்த
நல்கனடா மன்னியசீர் கருண லிங்கம்
அடுத்துநின்று எல்லோரும் போற்று கின்ற
அன்னவர்கள் தம்சோதரர் ஆவார் நன்றே.

வள்ளிநா யகியாம்நல் அமரர் ஆன்ற
வண்மைசால் புவனேஸ்வரி அமரர் அன்றி
கள்ளமில்லா சீதாதேவி தானும் அமரர்
கருத்துடைய மைத்துனர்கள் ஆவார் அன்றி
தள்ளரிய அன்புடைய சிவயோ கமுடன்
தகைசான்ற சிறப்புடனே லண்டன் வாழும்
வள்ளல்நல் ஜீவரத்னம் என்போர் தாமே
வளமார்ந்த மைத்துனர்கள் ஆவார் நன்றே.

மைத்துனர்கள் என்போர்தான் ஒன்றா எண்ணில்
மதிப்புள்ள நமசிவாயம் அமரர் ஓய்வு
கைத்தலம்சேர் தபாலதிபர் ஓய்வு பெற்றுக்
காலமான மீனாட்சிப் பிள்ளை ஆசான்
இத்தரையை விட்டுவிட்ட வேலா யுதமும்
இலட்சுமிப்பிள் ளையுடனே பராசக் தியுமே
வைத்தநல்ல மைத்துனர்கள் ஆவார் நன்றே
விருப்புள்ள அன்னவர்கள் போற்ற வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமிசைதான் மகேஸ்வரியும் சுற்றம் போற்ற
நீடுயர்ந்த கல்விதனைக் கற்ற போதும்
மலர்ந்தபேர் பருவம்தான் வந்து சேர
மருவியநல் ஆனைக்கோட்டை என்ற ஊரில்
அலகில்லா புகழுடனே வாழ்ந்த சபாப(தி)
அழகார்ந்த விசாலாட்சி பெற்ற மைந்தன்
பலர்புகழ்நல் வர்த்தகராம் அருணா சலத்தை
பண்புடனே திருமணம்தான் செய்தனர் பெற்றோர்.

திருமணம்தான் இருமனத்தின் சேர்க்கை அன்றே
திறலுடைய பெரியோர்கள் சொன்ன கூற்றை
பெருவிருப்பாய்க் கைக்கொண்டு சுற்றம் ஓம்பி
பெரியோரை அன்புடனே போற்றி நல்ல
வருவிருந்து வைகலுமே பேணி நன்றே
வளவியநல் அறங்களெல்லாம் நன்கு செய்து
கருத்துடனே கடமைகள் எல்லாம் ஆற்றி
கணபதிதான் தவறாமல் வணங்கி வந்தார்.

இல்லறத்தின் நற்பயனாய் உற்றார் போற்ற
இனியவனாம் ஸ்ரீகாந்தா வந்து பிறந்தான்
சொல்லியதம் மைந்தனையே கட்டித் தழுவி
சோர்விலாது கடமைகள் எல்லாம் செய்து
கல்வியையும் கருத்துடனே வழங்கி நின்றார்
காந்தாவும் கல்வியையே நன்கு கற்று
நல்வாக்கர்ஸ் சுற்றுலா கம்பனி தன்னில்
நலமுடனே பணிபுரியக் கண்டு மகிழ்ந்தார்.

இரத்தினகோ பாலெனும் இனிய மைந்தன்
இவ்வுலகில் அடுத்துவந்து பிறந்தான் மைந்தன்
தரணிபோற்ற வாழவேண்டிய கல்வி நன்றே
தளர்விலாது வழங்கினார்கள் பெற்றோர் தாமே
சிரமமின்றி பல்கலைகள் எல்லாம் பெற்று
சீரியநல் இலங்கையின் போக்கு வரத்து
தரமான சபைதன்னில் சேவை செய்ய
தம்மைந்தர் திறம்கண்டு மகிழ்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகனின் அருளாலே வந்த மைந்தன்
ஆறுமுகனை அன்புடனே உச்சி மோந்து
கூறும்நல்ல கலைகளையே வழங்கி நிற்க
குறைவின்றிக் கல்வியையே நன்கு கற்று
மாறுபடாக் கல்வியிலே ஊன்றி நின்று
மதிப்புடைய ஹற்றன்நா ஷனல்வங் கியிலே
வேறுபாடின் றிமுகாமை யாளர் என்னும்
விரும்பியநற் பணிசெய்யக் கண்டு மகிழ்ந்தார்.

சிவநாதன் என்கின்ற செல்லப் பிள்ளை
சிறப்புடனே வாழ்வதற்காய் ஆன்ற கல்வி
நவநவமாய் வழங்கினார்கள் நாதன் தானும்
நன்றாகக் கல்வியையே கற்றுத் தேறி
அவமேதம் காலத்தை வீணாக் காது
ஆற்றலுடன் நோர்வேநல் நாடு சென்று
அவனிபோற்ற நற்பதவி செய்யக் கண்டு
அளவில்லாத மகிழ்ச்சியிலே திளைத்து நின்றார்.

மக்கட்செல் வங்களின்சீர் சிறப்பு கண்டு
மனநிறைவும் மகிழ்ச்சியுமே நன்கு பெற்று
மக்கட்செல் வங்கள்தான் ஏற்றம் பெற்று
மாண்புபெற்றிட மணமுடிக்க நன்றே எண்ணி
தக்க நல்ல மருகராய் தரணி போற்ற
தகைசான்ற தேசிகநர தன்யோ கேஸ்வரி
மிக்க தம்பதி பெற்ற வனிதா தம்மை
மூத்தநல்ல மருகராய்ப் பெற்று மகிழ்ந்தார்.

சிவசிதம்பரம் அன்னமுத்து தம்பதி பெற்ற
சிறப்பான ஆசிரியர் சேவை ஆற்றும்
சிவகலையாம் செம்மைசால் நல்லாள் தாமே
சிறந்தநல் மகிழ்வுடைய இனிய மருகர்
அவனிபோற்ற சுருளிமலை ராஜா மல்லி(கா) தேவி
அன்புடைய தம்பதியர் பெற்ற செல்வி
தவப்புதல்வி நல்லவளாம் சாந்தி அடுத்த
தனித்துவமாய் பெற்றநல்ல மருகர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஸ்மணன்சந் திரகுமாரி எனறு சொல்லும்
இன்தம்பதி பெற்றிட்ட கனிஷ்ட நங்கை
தக்கநல்ல சித்திராவே அடுத்து வந்த
தகவுடைய சிறப்பான மருகர் ஆவார்
மக்கள்செல் வமுடனே மருகர் செல்வம்
மாண்புடைய செல்வங்கள் எல்லாம் பெற்று
மிக்கநல்ல மனநிறைவாய் யாரும் போற்ற
மேதினியில் மங்கலமாய் என்றும் வாழ்ந்தார்.

அன்னவர்தம் மகிழ்வுபொங்க இன்பம் பொங்க
அறிவுடைய கோகுலாயினி சுகன்யா நல்லாள்
அன்புடைய அரவிந்தன் சுகிர்தன் நம்பி
ஆற்றலுடைய ஆரண்யா ஆத்மிகா நங்கை
இன்பம்சேர் சோபியா என்னும் செல்வி
இனிய நல்ல அன்புடைய பேரர் தாமே
அன்புடைய பேரர்களை என்றும் தழுவி
அவனிபோற்ற மகிழ்வுடனே நன்றே வாழ்ந்தார்.

பந்தமது மாயையென உள்ளம் தேறி
பார்வாழ்வில் கடமையை நன்றே செய்தும்
சிந்தையில் இறைபற்று நீண்டு நிற்க
சீரியநல் இறைவனையே உள்ளம் நாட
நொந்தொருசொல் சொல்லாமல் பற்று அற்று
நிர்மலமாய் உள்ளத்தில் அறிவு தோன்ற
சந்தனம்போல் தான்மணந்து யாரும் போற்ற
சலியாத உறுதியுடன் வாழ்ந்து வந்தார்.

கட்டியநல் நாயகனின் கடமை செய்தும்
கண்ணியமும் கட்டுப்பாடும் நன்கு போற்றி
தொட்டநல்ல நாள்முதலாய்த் தொண்டு செய்தும்
தூய நல்ல பிள்ளைகள் பேரர் தாமும்
இட்டமுள்ள உடன்பிறப்பு மற்றும் உள்ள
இதமான உறவினர்கள் மாசறு நண்பர்
வட்டம்போல் குழாமனைத்தும் போற்றி நிற்க
வள்ளல்போல் வளமாக வாழ்ந்தார் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித்திடும்நல் காலம்தான் வந்து நண்ண
கருத்துடைய பக்குவமும் நன்கு பெற்று
மணிநிகர் நல் உறவுகளும் மக்கள் சுற்றம்
மாசறுநல் பிள்ளைகள் அயலார் அன்றி
அணிதரும்நல் அன்புடைய பேரர் இன்னும்
அவனியில் உள்ளவர்கள் எல்லாம் விட்டு
அணிதரும் ஒன் பதுகுடிலாம் ஆடை அகற்றி
அவனியில் பற்றுக்கள் எல்லாம் நீத்தார்.

ஆடியநல் மக்களும் சுற்றம் மற்றும்
ஆசைதீர்த்த வாரிசுகளும் மருகர் பேரர்
கூடிக்குலா வும்கூட்டமும் நண்பர் யாரும்
குழறிமேல் வீழ்ந்துகண்ணீர் சொரிய நன்றே
தேடியநல் தாரணவர் ஷம்சார் பங்குனி
திங்கள்தன் னில்தேதி இருபத் தொன்றில்
நீடியபிற பகல்வேளை தசமித் திதியில்
நேயமுள்ள இறைவன்தான் சேர்ந்தார் அன்றே.

ஓம் சாந்தி ... ஓம் சாந்தி ... ஓம் சாந்தி ...

## தேற்றம்

மாய வாழ்வென்று மங்கை நன்குணர்ந்து
காயம் பொய்யென்று கண்டு - நேயமுள்ள
நல்லாள் மகேஸ்வரிதான் நில்லா இவ்வுலகை
மெல்லத் துறந்ததுவே மேல்

**ஆக்கம்**

**பண்டிதை செல்வி. யோகலட்சுமி சோமசுந்தரம்**
(BA.Dip.in Education) **ஒய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்,**
**வைரவப் புளியங்குளம், வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்கள்

## மக்கள் புலம்பல்

பொன்னும் பொருட்செல்வம் பலவும் இங்கிருந்து
என்ன பயன்தான்இவ் உலகில் - அன்புடைய
அம்மா அவனியிலே ஆன்ற பொருள் ஏது
சும்மா தவிக்கின்றோம் யாமே.

## மருமக்கள் புலம்பல்

மருகர் என்ற சொல்லை மறந்தும் கூறிடாது
உருகும் தம்மகளாய் உவந்து - பெருவுலகில்
எங்கள் ஏற்றமனதை எண்ணிச் செயல்புரிந்தீர்
நாங்கள் தனித்துவிட்டோம் இன்றே.

## பேரர் புலம்பல்

நிலாவில் கதைகள்சொல் லியேநல் ஒழுக்கமுடன்
குலாவித் பாட்டியேநீர் வளர்த்தீர் - ஞாலமதில்
தனித்து நிற்கின்றோம் இன்று நாங்கள்தான்
இனிநாம் காண்தெப்போ சொல்லு.

## உறவினர் புலம்பல்

அறமும் அன்பும்நல் அருளும் பெருகிடவே
சிறந்த அன்புடைய திருவே - புறவுலகில்
பந்த பாசமுடன் பற்றும் அறுத்திட்டு
சொந்தம் என்றெங்கே சென்றீர்?

## அயலவர்/நண்பர்கள் புலம்பல்

நன்மை பலசெய்த நல்ல சீமாட்டி
மன்னு புகழ்மண்ணில் விட்டு - இன்று எங்கள்
ஆட்டம் எல்லாமே அடங்க அவனியிலே
நாட்டம் விட்டெங்கு சென்றீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயக்கிரியைகள்

## கிரியைகளின் பங்கு

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமாகிய பொருள் பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி = இல்லாத, நாயகர் = தலைவர், அஃதாவது தமக்குத் தலைவரில்லாதவர், மேலான தலைவர் எனப் பொருள்படும்.) எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயக வணக்கம். கிரியை இனிது நடந்து முடிவுற முதல்வனை வணங்குதல் இது. குருசமய கிரியைகளுக்கெல்லாம் தலைவராலாலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர். (கு = மலம், ரு = நீக்குபவர்) சந்தனம், மஞ்சள், அல்லது கோமயம் (பசுச்சாணம்) இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அறுகம்புல் மேலே சாத்தி வணங்குவது வழக்கம்.

### பவித்திரமணிதல்

பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது. இதன்நோக்கம் கிரியை செய்யும்போது மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களின்றுங் காத்தல். (பவித்திரம் - பதனாத் - த்ராயதே பாவத்திலே விழுதலினின்றும் காப்பது காமிகம்)

### சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்ன காலத்திலே, இன்ன இடத்திலே, இன்ன நோக்கமாக இது செய்யப்பபோகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழுஞ் சிருஷ்டித் தொடக்கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதாலேயே காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கற்ப முறை

ஆண்களுக்கு வலது கையில் தருப்பை, பூ, அரிசி முதலியவற்றை வைத்துக்கொண்டு வலது கையை மேலாகவும், இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைக்கவேண்டும். இதேபோல் பெண்களுக்கு இடது கையில் தருப்பை அரிசி முதலியவற்றை கொடுத்து இடது முழந்தாளில் வைக்க வேண்டும்.

## சங்கற்ப வாக்கியத்தின் கருத்து

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ்வத மந்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தில் முற்பகுதியில் ஜம்பூத்துவீபத்தில் பாரத வருஷத்தில் பர கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே (இடத்தின் பெயர்) பிரபவ முதலான அறுபது வருஷங்கள் (இன்ன) வருடத்தில் (இன்ன) சமயத்தில் (இன்ன) பருவத்தில் - (இன்ன) மாதத்தில் - (இன்ன) பட்சத்தில் - (இன்ன) ததியில் வாரத்தில் நட்சத்திரத்தில் - (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இந்த புண்ணிய தினத்தில் மம (என்னுடைய) - (இன்ன) நோக்கமாக (இன்ன) கிரியை செய்யப் போகிறேன்.

## கும்பம் வைத்தல்

கடவுளைக் குடும்பத்தில் வழிபடும் போது, கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகிறது. வாழையிலையை அதன் தலைப்பகுதியை வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக வைத்து அதில் நெல் அல்லது பச்சை அரிசி இட்டு தண்ணீர் நிறைந்தகுடம் வைத்து ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்குக் கீழ் ஒரு பட்டுப் போர்த்தல் வேண்டும். தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலைமயிராகவும், குடம் தசையாகவும், நூல் நாடிகளாவும், பட்டு தோலாகவும், தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகிறது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாடக் கிரியைகளில் சில முறைகள்

**மாவிலை**

இது முக்கியமாக மங்கலப் பொருளாகவும், தோரணமாகவும், கட்டபடுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள், இல்லங்கள், திருமண வைபவங்களிலும், இம்மங்கலப் பொருள் பயன்படுத்தப்படும். சகல வைபவங்களிக்கும் கும்பம் வைக்கும் பொழுது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது, தேங்காய் தலையாகவும், கும்பத்துக்குச் சுற்றும் நூல் நாடியாகவும், அதற்குள் இடும் நீர் இரத்தமாகவும், கட்டப்படும் பட்டு உடையாகவும், பயன்படுத்தப்படும். மாவிலை தோரணம் அமைக்கும் போது மூன்று முறையாகப் பயன்படுத்தப்படும்.

**01. நற்காரியங்கள்**

ஆலயங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும் திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுபகாரியங்கள் நடைபெறும் போதும் மாவிலைத் தோரணம் இலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தி தொங்க விடுதல், மாவிலை தலைகுனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும். (05 அல்லது 07 இலைகளைக் குத்தலாம்) இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தன்மையாகும்.

**02. கும்பம் வைக்கும் போது**

தேங்காயின் கீழ் அமைத்தல் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகள் அமைத்தல் சிறப்பாகும்.

**03. அபரக்கிரியைக் காலங்கள்**

இது வீட்டில் மரணச்சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறை. மாவிலையின் காம்பு நுனியை பின்பக்கமாக மடித்துக்குத்தி தொங்கவிடல் முறையாகும். இது இம்முறைக்கு மட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழைமரம்**

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில், திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல், இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையின் உணவு அருத்துதல், இதன் தண்டு, காய், பழம், பூ, கனி, உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும், பயன்படுகின்றது. இதனை அழிக்கவே முடியாது. இது வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழைமரம் பழத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும் மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக் காட்டாக அமைகிறது. வாழைமர இலையில் பயன்படுத்தும் முறை வைக்கும் போது தலை நுனிப்பக்கம் எப்பொழுதும் கிழக்குத்திசை அல்லது கும்பம் வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இது மட்டுமல்ல சாப்பிடும் போது தலை, நுனி, இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலை நுனி தெற்குப் பக்கமாகப் போடுதல் வேண்டும்.

**தென்னந் தோரணம்**

தென்னங் குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப் பாகமாக இருக்கும் படியாக சுபகாரியங்களுக்கும், மேற்பக்கமாக அபரக்கிரியைகளுக்கும் அமைய வேண்டும். தோரணத்திற்கு வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னப் பிராசனம்

பிறந்து ஆறாம் மாதம் முதல் இரட்டை மாதங்களில் ஒன்றில் ஆண் குழந்தைக்கும், ஐந்தாம் மாதம் முதல் ஒற்றை மாதங்களில் ஒன்றில் பெண் குழந்தைக்கும் அன்னப் பிராசனம் செய்யலாம். பிள்ளையார் பூசை செய்து திருவிளக்கேற்றி இடம் பெறுவது சிறப்பு.

இதற்கு பால் பருக்கல், சோறு தீற்றுதல், எனப் பேச்சுவழக்கில் கூறப்படுவதுண்டு. ஆண்களுக்கு 06ம், 08ம், 10ம், 12ம் மாதமும், பெண்களுக்கு 05ம், 07ம், 09ம், 11ம், மாதமும் சுபமுகூர்த்தம் பார்த்து, உப்பு நீக்கிய சர்க்கரை அமுது அல்லது கற்கண்டு அமுது பொங்கி, ஆலயங்களில் அல்லது வீட்டில் வைத்து பூஜை செய்து தந்தை மூன்று தடவை எடுத்து ஊட்டி தொடர்ந்து மற்றையோரும் எடுத்து ஊட்டி ஆயுள் ஆரோக்கித்துடன் வாழக் குழந்தையை ஆசீர்வதிப்பர்.

## வித்தியாரம்பம்

இது மூன்றாம் அல்லது ஐந்தாம் வயதுகளில் ஆரம்பிக்கலாம், சுபவேளையில் பிள்ளையார் பூசை, சரஸ்வதி பூசை செய்து வித்தியாரம்பம் செய்தல்வேண்டும். குழந்தைக்கு முதன் முதலில் கல்வி கற்க ஆரம்பித்தல் பெரும்பாலும் எம்மவர்கள் விஜயதசமி எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தியன்றே வித்தியாரம்பத்தை மேற்கொள்வார்கள். இருப்பினும் தைப்பூசத்தன்று மற்றும் தை முதல் ஆனி வரையிலான காலப்பகுதியில் ஜாதகரின் நட்சத்திரத்திற்கு ஏற்ப அமைந்த சுபநாளிலும் இதைச் செய்யலாம். தந்தை அல்லது ஆலயகுரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம்பத்தைச் செய்யலாம். கல்வியின் மேன்மை அடையவே, முதற்கல்வியைச் சுபநாளில் சுபநேரத்தில் செய்வது சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டிற்கு அத்திவாரமிடல்

நாம் வீடு கட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்திற்குள் முதன் முதலில் செய்யும் பூஜையானது அத்திவாரமிடல், அதற்கு நாம் முறையாக சிவாச்சாரியாரை அணுகி அவருடைய அறிவுரை ஆசியுடன் புண்ணியக்ஷேத்திரங்களாய் விளங்கும் ஆலயங்களில் வீதி மண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், ஆணைக்கொம்பினால் எடுத்த மண், (ஆனை தந்தத்தால் எடுத்த மண்) எருதுக்கோட்டு மண் (எருது பாதம் படட மண்), குளத்து மண் போன்றவற்றை ஒரே அளவில் எடுத்து குழைத்து பெட்டி செய்து, அடிப்பேழையில் பள்ளஞ் செய்து அவற்றில் நவரத்தினக்கற்களைப் போட்டுத் தங்கத் தகட்டில் "வாஸ்து யந்திரம்"போட்டு ஈசான மூலையில் (வடகிழக்கு மூலையில்) வைத்துப் பூஜை செய்ய வேண்டும். வீட்டின் பெரியார் கையால் அதைக் குழியில் இட்டு அத்திவாரமிடல் வேண்டும்.

இதற்குரிய விளக்கம் யாதெனில் காலங்காலமாக எம் சந்ததியினரை வாழ வைக்கும் "கிரகலக்சுமி"எனப்படும் வீட்டையும், எம்மையும், தாங்கி நிற்கும் பூமாதேவியே எம்மால் இயன்ற நவரத்தின பொன், பொருள், தானங்களை உமக்கு அர்ப்பணிக்கிறோம். அதை காலை வேளையில் சூரிய பகவான் சாட்சியோடு மக்களுக்காவே தம்மை அர்ப்பணித்து அவர்களுக்காகவே என்றும் இறைவனைப் பிராத்திக்கும் சிவாசாரியர்களின் துணையோடு முறையாக உமக்கு அர்ப்பணிக்கின்றோம். எமது வீட்டு நிலத்தில், நீர்வளம், நிலவளம், பயிர்வளம், நிறைந்து நிற்க அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கும் பூஜையாகும்.

அதே போன்று வீட்டு வேலைகள் நடைபெறும், காலம் வீட்டிற்கு முதல் நிலை, வளை என்பன சுபமுகூர்த்தங்களில் வைக்கும் போது அதற்குரியவர்கட்கு தச்சுவேலையாளிக்கு வஸ்திரம், தட்சணை, தாம்பூலம், கொடுத்து உபசரித்து அவர் மனம் மகிழ எமை வாழத்திட வழி செய்யும் உபசாரமாக இது அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலே வழிபாட்டறை அமைக்கும் போது கிழக்கு முகமாக அமைப்பது உத்தமமாகும். வழிபாட்டு அறையில் சுவாமிப் படம் தென்மேற்கு மூலையில் கிழக்குத் திசையை பார்க்கத்தக்கதாக வைக்க வேண்டும். பொதுவாகவே வழிபாட்டறை தனிமையானதாகவும், பரிசுத்த இடமானதாகவும், அமைவது வீட்டிற்குச் செல்வபோகங்களைக் கொடுக்கும், தீட்டுகள் (ஆசௌசம்) வரும் காலங்களில் வழிபாட்டறையை யாரும் அணுகாது மூடிவிடுதல் உத்தமம்.

## கிரஹப் பிரவேசம் (புதுமனை புகுதல்)

கிரஹப் பிரவேசம் எனப்படுவது ஒரு புதிய வீட்டைக் கட்டி முடித்து முதல் முதலாய் வீட்டினுள் பிரவேசிப்பதாகும். முதல் நாள் இரவில் செய்யப்படும் பூசையானது "வாஸ்து" என்படும் தேவதை வீட்டின் காவல் தெய்வமாய் போற்றப்படுவர். அந்த வாஸ்து வைக்கும்பத்தில், "ஆவாகனம்"செய்து (மந்திரகிரியா நெறியால் வரவழைத்து) பிரியமாய் பூஜையும் ஹோமத்தில் ஆகுதியும் கொடுத்து, வைக்கோலில் பொம்மை கட்டி, அப்பொம்மைக்குத் தீமுட்டி, வீட்டைச் சுற்றியும், வீட்டின் உள்ளேயும் சுற்றி இழுத்து, துஷ்ட தேவதைகள், கண்ணூறுகள் எல்லாம் அந்த நெருப்பில ஈர்த்தி, மீண்டும் அணுகா வண்ணம் வாஸ்து கும்பஜலம் எங்கும் தெளித்து அந்த வைக்கோல் பொம்மையை முற்சந்தியில் போட்டு எரித்து அந்த துஷ்ட தேவதைகளுக்கு உயிர் பலி கொடுக்கும் முகமாய் நீற்றுப் பூசணி வெட்டி அர்ப்பணித்து விடுதல் வேண்டும்.

அடுத்த நாள் முகூர்த்த நேரத்தின் முன்னர் கோவிலில் பூசையில் வைத்திருந்த விநாயகர், லக்ஷ்மி, சரஸ்வதி, முருகன், படங்களுடன் தீபம், பூரண கும்பம், பூமாலை, மஞ்சள், தாம்பூலம், பால், பழம், நைவேத்தியங்கள், உப்பு, நெல், முதலிய தானியங்கள், பணம், வெள்ளி, நவரத்தினம், நவவஸ்திரம், ஆபரணம், என்பவற்றை மங்கள வாத்திய கோசத்தோடு சுமங்கலிகள் குறிக்கப்பட்ட முகூர்த்த நேரத்தில் கொண்டு வந்து வீட்டினுள் பிரவேசிக்க வேண்டும். அதன் மேல் வீட்டினுள் (சுவாமி அறையில்) பால் காய்ச்சி கணபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலஷ்மி விசேட பூஜைகள் செய்து, அந்தணர்கள், சுமங்கலிகள், முதலியவர்களுக்கு தட்சணை, வஸ்திரம் முதலிய தானம் கொடுத்து, அவர்கள் திருப்தியடைந்து மனப்பூர்வமாய் ஆசிவழங்க வேண்டும்.

## வீடு கட்டும் போது பின்வரும் விடயங்களைக் கவனிக்க வேண்டும்

01. வாசல்கால் நிலை வைக்காமலும், தரை பூசாமலும், சுவரில் சுண்ணாம்பு அடிக்காமலும், விவாகம் செய்த வருடத்திலும், மனைவி கர்ப்பமாக இருக்கும் காலத்திலும், இயற்கை உத்பாதம் நடக்கையிலும், வேதம் சொல்லாமலும், திருமுறை ஓதாமலும், வாஸ்து ஹோமம் செய்யாமலும் புதிய வீட்டில் கிரஹப்பிரவேசம் செய்யக்கூடாது.

02. இயற்கை உத்பாதம் என்பது இடியுடன் கூடிய மழைக்காலம் மற்றும் புயல் காற்று நில நடுக்கம், உண்டாகும் காலம் வானத்தில் வால்நட்சத்திரம் தோன்றும் காலம் போன்றவை இவை விலக்க வேண்டும்.

03. கிழமைகளில் செவ்வாய், சனி,ஞாயிறு, விலக்கத்தக்கவை, கிரஹப்பிரவேசம் செய்யும் வீட்டுத் தலைவனின் ராசிக்கு எட்டில் சந்திரன் இருக்கும் காலமும் விலக்கத்தக்கவை. மேலும் நல்ல நாளும் கோளும் அறியாமல் பிரவேசிக்கக் கூடாது.

04 முதலில் பசு செல்வதால் லட்சுமி தேவி சந்தோஷம் அடைகிறாள்

05. அடுத்து தம்பதிகள் குல தெய்வ, இஷ்ட தெய்வப் படங்களுடன் பிரவேசிப்பதால் மன்னோர்களும் கிரக தேவதைகளும் பிரியமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சுமங்கலிப் பெண் இல்லத்தில் உள்ளே செல்வதால் மஹாலக்சுமி வாசம் உண்டாகிறது. (ஸ்வஸ்தி வசனம் வேத கோஷம்) இவை இரண்டாலும் அபசகுணங்கள் விலகிறது.

07. நண்பர்கள் அன்று விருந்து உண்பதால் அக்னி அருளும் வாஸ்து தோஷமும் நீங்குகிறது.

08. கூடுமானவரை பூஜை அறையும் கழிவறையும், பக்கத்தில் இல்லாமலும், சமயலறை கடந்து கழிவறை அடையாமலும் வாசலுக்கு நேர் கிணறு வைக்காமலும் முதலில் கட்டிய பிரதான வாயிலை மூடாமல் இருப்பதுவும் நல்லது.

## நாமகரணம் (பெயரிடுதல்)

பூமியிலே பிறக்கும் மனிதனுக்கு முதன் முதலில் நடாத்தப்படும் கிரியை "நாமகரணம்" எனப்படும். பெயர் சூட்டுதல் எனவும் கூறலாம். இது குழந்தை பிறந்த ஆசௌ கழிவன்று நடாத்தப்படும். கிரியையாகும். குழந்தை பிறந்த நட்சத்திரத்தின் எழுத்தொலிக்கேற்பவும், தெய்வாம்சம் பொருந்திய பெயராகவும், சந்ததி வழித்தோன்றல், பெயராகவும் அமைதல் நன்று. குழந்தையின் பெயரை குழுமியிருப்போருக்கும் இனிப்புப்பானம் வழங்க வேண்டும். இதன் பொருள் எமது வம்சத்தில் தோன்றியுள்ள இக்குழந்தையை எமது வம்சாவழி செயல் தொழில் கொள்ள, கண்கண்ட தெய்வமும், சைத்திரிய வம்சமும், நிறைந்த சூரிய பகவானை வணங்கி சூரியன் போல் பெயரும், வாழ்வும் பிரகாசிக்க வேண்டும். என்ற மரபு முறையில் நடாத்தப்படுவதாகும்.

## காது குத்துதல் (கர்ணவேதனம்)

குழந்தை பிறந்த ஆசௌசச் கழிவன்று அல்லது 06ம், 07ம், 08ம் மாதங்களிலும், காது குத்துதல் வைபவம் நாடத்தப்படும். இதற்கு பூஜை கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் வைத்து நிறைகுடம் வைத்து, வணங்கிச் செய்தல் வேண்டும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகட்கு ஏற்படும் அரிட்டதோஷ நிவர்த்திக்காகவும் தமிழர் பாரம்பரிய கலாசாரங்களை பேணுவதற்காகவும் செய்யப்படுகிறது.

## ருதுசாந்தி

ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்ந்து, பருவமடைந்து இல்வாழ்க்கைக்கும், தாய்மைக்கும் தகுதி உடையவளாய் மாறும் நாளே பூப்படைதல் எனப்படும். பெண் பூப்படைந்து ஒற்றைப் பட்ட நாளில் சுபதினத்தை எடுத்து அந்நாளில் சுத்தி புண்ணியாகம் செய்து பால் அறுகு வைத்து நீராட்டி கண்ணூறு கழியும் பொருட்டு நிறைகுடம், நிறைநாழில், பிட்டுப் கூம்பு, திருஷ்டி உருண்டை, குத்துவிளக்கு போன்றவற்றால் ஆர்த்தி எடுத்து திருஷ்டி கழிப்பது மரபு, இக்கருமம் எல்லா மாதங்களிலும் செய்யலாம். ருதுவபான தினத்தில் இருந்து ஒற்றை நாள் வரும் சுப தினத்தில் இக் கருமம் செய்தல் வேண்டும். ஒரு மாதத்துள் இவ் வைபவம் நாடத்தப்படுவதே சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் சோதிடம்

| எண் | எண்களுக்கான எழுத்துக்கள் |
|---|---|
| 1 | A, I, J, Q, Y |
| 2 | B, K, R |
| 3 | C, G, L,S |
| 4 | D, M, T |
| 5 | E, H, N, X |
| 6 | U, V, W |
| 7 | O, Z |
| 8 | F, P |

| எண் | கிரகம் | நட்பு எண் | பகை எண் |
|---|---|---|---|
| 01 | சூரியன் | 1,2,9,3 | 4,6,8,7 |
| 02 | சந்திரன் | 2,1,5 | 4,7 |
| 03 | குரு | 1,2,9 | 5,6 |
| 04 | ராகு,யுரா | 8,6 | 1,2,9 |
| 05 | புதன் | 1,6 | 2 |
| 06 | சுக்கிரன் | 5,8,4,7 | 1,2, |
| 07 | கேது, நெப் | 8,6 | 1,2,9 |
| 08 | சனி | 5,6,4,7 | 1,2,9 |
| 09 | செவ்வாய் | 9,1,2,3 | 5,4,7 |

| எண்நவரத்தினம் | வணக்கத்திற்குரிய தெய்வம் | உடைகள் |
|---|---|---|
| 01. மாணிக்கம் | நடராஜப்பெருமாள் சூரியனார் கோயில் | மஞ்சள், சிவப்பு |
| 02. முத்து | வெங்கடாசலபதி | வெண்ணிறஆடை |
| 03. புஷ்பராகம் | முருகன், தட்சணாமூர்த்தி | பொன்னிறம் |
| 04. கோமேதகம் | திருநாகேஸ்வரர் | பழுப்புஆடை |
| 05. கரும்பச்சை | சோமசுந்தரர் | இலைப்பச்சை |
| 06. இரத்தினப்பச்சை | சீறிரங்கநாதர் | இளநீலம் |
| 07. கற்ஸ் ஐ | கற்பகவிநாயகர் | வெளிர்ப்பச்சை |
| 08. கருநீலம் | சனீஸ்வரர் | கறுப்பு |
| 09. பவளம் | முருகன் | கருஞ்சிவப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது ஆருயிர் தெய்வம் அருணாசலம் மகேஸ்வரி அவர்களின் மரணச் செய்திகேட்டு எம் இல்லம் நாடிவந்தும், தொலைபேசி,தந்தி மூலம் ஆறுதல் அளித்தும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தும், இறுதிக் கிரிகைகள், எட்டாம்நாள் கிரிகை, அந்தியேட்டி/வீட்டுக்கிரிகைகள் முதலியவற்றில் கலந்து கொண்டும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், குறுகிய காலத்தில் இம் மலரை ஆக்கித்தந்த செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் (BA.Dip.in Education ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்) அவர்களுக்கும் இம்மலரைச் சிறப்பாக அச்சுருவாக ஆக்கி உதவிய வவுனியா மல்ரிவிஷன் அச்சகத்தாருக்கும், எமக்கு பல வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்,

மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

செம்பொற்சோதி + இராசலட்சுமி

↓

குமாரகுலசிங்கம்
மகேஸ்வரி
தனபாலசிங்கம்
குலேந்திரசிங்கம்
கருணைலிங்கம்
பூமாதேவி

சபாபதி + விசாலாட்சிப்பிள்ளை

↓

நமசிவாயம்
அருணாசலம்
இலட்சுமிப்பிள்ளை
பராசக்தி
மீனாட்சிப்பிள்ளை

அருணாசலம் + மகேஸ்வரி

↓

| | | | |
|---|---|---|---|
| ஶ்ரீகாந்தா + வனிதா | இரத்தினகோபால் + சிவகலை | ஆறுமுகன் + சாந்தி | சிவநாதன் + சித்திரா |
| ↓ | ↓ | ↓ | ↓ |
| கோகுலாயினி<br>சுகன்யா | அரவிந்தன்<br>சுகிர்தன் | ஆரண்யா<br>ஆத்மிகா | சோபியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

மல்ரீவிஷன் அச்சுக்கலையகம். 024 2223669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org